[10th March 1966

திரு. மா. தண்டாயுதபாணி : தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட இருக்கிற கல்லூரி தஞ்சையிலேயே ஆரம்பிக்கப்படுமா ? அல்லது வேறு இடத்தில் ஆரம்பிக்கப்படுமா ? அது பெண்கள் கல்லூரியாக இருக்குமா ? அல்லது இருவரும் சேர்ந்து படிக்கும் கல்லூரியாக இருக்குமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான் குறிப்பிடும் கல்லூரி தஞ்சையிலே மகளிர்க்கான கல்லூரி.

திரு. நா. துரைப்பாண்டியன் : தலைவர் அவர்களே, தாராபுரம் தொகுதியில் கல்லிக்குளத்தில் புதிதாக ஒரு கல்லூரிக்கு அஸ்திவாரம் போட்டிருக்கிறார்கள். அதற்கு அனுமதி கொடுக்க முடியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான் குறிப்பிட்டது அரசாங்கம் அமைக்கிற கல்லூரிகளைப் பற்றியது. திருநெல்வேலி ஜில்லாவில் அரசாங்கம் எதுவும் அமைப்பதாக இல்லை.

திரு. ஜே. மாதா கவுடர் : சார், முதல் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட லிஸ்டில் என்னுடைய மாவட்டமும் இருக்கும் என்று எதிர்பார்த்தேன், ஆனால் ஏமாற்றம் அடைந்து விட்டேன். சர்க்கார் துறையிலே ஆரம்பிக்கவில்லை என்றாலும் செயின்ட் ஜோசப் பெண்கள் கல்லூரி என்று ஆரம்பிக்க முன் வந்திருக்கிறார்களே, அதைப் பரிசீலிப்பார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இப்போது அளித்த விடை அரசாங்கமே ஆரம்பித்து நடத்தும் கல்லூரி பற்றியது. கனம் உறுப்பினர் ஏமாற்றம் அடைந்ததாகச் சொன்னார்கள். உதகையிலே சர்க்கார் ஒரு கல்லூரியை அமைத்தது. முதலிலேயே சர்க்கார் அமைத்த கல்லூரிக்கு நீலகிரி மக்கள் உடனடியாக நிதி அளிப்பதாகச் சொன்னார்கள். அவர்கள் அளிக்கவில்லை என்பது எனக்கும் பெருத்த ஏமாற்றம். தனிப்பட்டவர்கள் கல்லூரி வேறு விஷயம். அதைப் பற்றித் தனியாகக் கேள்வி போட்டால் பார்த்துச் சொல்லுகிறேன்.

திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் திருப்பனந்தாள் பண்டாரசந்நதி அவர்களின் உதவி கொண்டு ஆடுதுறையில் கல்லூரி ஏற்படுத்த அரசாங்கத்திடம் கோரிக்கை வந்ததே, அது எந்த நிலையில் உள்ளது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அந்தத் தகவல் என்னிடம் இல்லை.

*** 239 கேள்வி—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கடலூரில் உள்ள அரசாங்கக் கலைக் கல்லூரிக்கென புதிய கட்டடம் கட்டுவதற்கு எஸ்டிமேட் தயாரித்து டெண்டர் விடப்பட்டது உண்மையா ?

(இ) ஆமெனில், அதன் விவரமென்ன ?

10th March 1966]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) A sum of Rs. 24 lakhs* has been sanctioned for the construction of permanent buildings for the college. Necessary further action such as calling for tenders is being taken by the Chief Engineer (Buildings), Public Works Department.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : தலைவர் அவர்களே, இப்போது புதிதாகக் கட்டப்பட்டிருக்கிற கல்லூரியோடு மாணவர்கள் தங்குவதற்கு ஹாஸ்டல் கட்ட உத்தேசிக்கப்பட்டிருக்கிறதா? இப்போது ஹாஸ்டல் வசதி இல்லாது மாணவர்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். கல்லூரியோடு சேர்ந்தாற்போல ஹாஸ்டல் கட்ட ஏற்பாடு செய்யப்படுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கல்லூரிக்குக் கட்டடம் கட்டும் போது ஹாஸ்டலும் கட்டத்தான் வேண்டும். கல்லூரிக்கே பொது மக்கள் சட்ட மன்ற உறுப்பினர் உட்பட 5 லட்சம் ரூபாய் நன்கொடை அளிப்பதாகச் சொல்லி அது பூர்த்தி ஆகவில்லை. இன்னும் அவர்கள் வசூலித்துக் கொடுக்க வேண்டியிருக்கிறது. அதில் கனம் அங்கத்தினரும் பொறுப்பாக அக்கறை எடுத்துக் கொண்டால் மேலும் மேலும் ஹாஸ்டல் கட்டடம் எல்லாம் கட்ட சௌகரியமாக இருக்கும்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு அரசாங்கம் எழுதிய ஒரு கடிதத்தில், ஏற்கெனவே கட்டிய 1 லட்சம் ரூபாய் போதாது, மேற்கொண்டு 2 லட்சம் ரூபாயாவது கொடுத்தால் தான் கல்லூரிக் கட்டடம், ஹாஸ்டல் கட்டடம் கட்ட முடியும் என்று எழுதினார்கள். அதற்குப் பிறகு நிதி வசூலித்து 2 லட்சத்திற்கு மேல், கேட்டதற்கு மேல், கொடுத்திருக்கிறோம். சட்ட மன்ற உறுப்பினர் மட்டுமல்ல, மற்றவர்களும் வசூலித்துக் கொடுத்து விட்டார்கள். கல்லூரி கட்டுவதில் 24 லட்சம் ரூபாயோடு மேலும் 2 லட்சம் செலவு செய்து ஹாஸ்டல் கட்ட அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : 3 லட்சம் கொடுத்தது, கொடுத்தும் பூர்த்தியாக அரசாங்கத்திற்குச் சேரவில்லை. அரசாங்கம் கோருவது. எதிர்பார்ப்பது 5 லட்சம் ரூபாய். இருந்தாலும் அரசாங்கம் இந்த மாதிரித் திட்டம் போட்டு, அதிகமாகச் செலவு செய்து கட்டடம் கட்டுவது அரசாங்கத்தின் அக்கறையைக் காட்டுகிறது. அரசாங்கம் எப்படியும் கட்டும் என்று எதிர்பார்த்த அளவு கூட கட்ட முன் வராமல் இருந்தால் அதனால் அரசாங்கத்திற்குத் தொல்லை ஏற்படும். 5 லட்சம் ரூபாயை வசூலித்துக் கொடுக்க பொது மக்களும் மக்கள் பிரதிநிதிகளும் அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : ரூ. 5 லட்சம் வசூலிக்கவேண்டும் என்ற முறை எல்லாக் கல்லூரிகள் விஷயத்திலும் கையாளப்பட்டதா? செங்கற்பட்டு மாவட்டத்தில் எத்தனை லட்சம் கொடுத்

[10th March 1966

தார்கள் ? மேலும் ரூபாய் ஒரு லட்சம், இரண்டு லட்சம் கூடக் கொடுக்காத இடங்களில் கல்லூரிகள் ஆரம்பிக்கப்பட்டு நடத்தப் படுகின்றன. இப்பொழுது நாங்கள் ரூ. 3 லட்சத்திற்கு மேலே கொடுத்திருக்கிறோம். ஆகவே, இங்கே ஒரு ஹாஸ்டல் கட்டடம் ஆரம்பிக்கப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கட்டடத்தைப் பொறுத்தமட்டில் அதிகச் சலுகை கொடுக்கப்பட்டிருக்கிறது. கல்லூரி ஆரம்பிக்காமல் இல்லை, கல்லூரி நடக்கிறது. மேலும் புது வகுப்புகள் ஆரம்பிப்பதற்கும் அங்கீகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏதோ கனம் உறுப்பினர் செங்கற்பட்டுக் கல்லூரியைப் பற்றிச் சொன்னர். செங்கற்பட்டைப் பொறுத்தவரையில் ரூ. 5 லட்சத்திற்கு ஒரு பைசா கூடக் குறையவில்லை. கனம் உறுப்பினர் அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம். வேறு எந்த மாவட்டத்திலும் கூட ரூ. 5 லட்சத்திற்குக் குறைவாக வசூலிக்கப்படவில்லை, ஏதோ ஒன்றிரண்டு இடங்களைத் தவிர. ஆனல், செங்கற்பட்டைப் பொறுத்த வரையில் ரூ. 5 லட்சம் பூராவும் வந்துவிட்டது.

திரு. ம. கமலநாதன் : முதல் அமைச்சர் அவர்களுக்கு நன்ருகத் தெரியும் தர்மபுரி எப்படி பின்தங்கிய பகுதி என்பது. கிருஷ்ணகிரியில் அதற்கு மேலே பணம் வசூலிக்க முடியாது என்ற சூழ்நிலையை நன்ருக உணர்ந்து, எங்களை ரூ. 5 லட்சம் வசூலிக்கவேண்டும் என்று வற்புறுத்தாமல், கட்டடம் கட்டிக் கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அது சரியல்ல. மேலும் பிரயத்தனம் செய்து கனம் உறுப்பினர் அவர்களும், மற்றவர்களும் பொது மக்களும் எதிர்பார்க்கிற அளவுக்கு, வாக்குறுதி அளிக்கப்பட்ட அளவுக்கு நிதி அளிக்கவேண்டும். தர்மபுரி கல்லூரி மேலும் மேலும் விருத்தி அடைவதற்கு உரிய வகையில் அரசாங்கம் கவனம் செலுத்திக் கொண்டு வருகிறது.

***240 கேள்வி.—திரு. கரு. சீமைசாமி :** கனம் முதலமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) புதிதாகக் கல்லூரியில் சேரும் மாணவர்களிடமிருந்து அரசியலில் ஈடுபடமாட்டேன் என்ற உறுதி மொழி பெற வேண்டுமென்று கல்லூரிகளுக்கு அண்மையில் அரசாங்கம் உத்தரவு ஏதேனும் பிறப்பித்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No such instructions have been issued.

(b) Does not arise.